திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள தெந்திருப்பேறை என்ற கிராமத்தில் இரவில் போகும் பஸ்கள் கடயனோடைப் பகுதி மக்கள் போக முடியாத நிலையில் இருப்பதால், இனிமேலாவது இதை ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடிக்குத் தெரிவித்து, அதன்பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கடயனோடைக்கு பஸ்ஸை நீட்டுவதுபற்றி ஆர். டி. ஓ. வைக் கேட்டதில், ஒரு பஸ்ஸுக்கே பயணிகள் வருவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டு பரிசீலிக்கப்படுவதற்கில்லை.

* 634 வினா—**திரு. டி. மார்டின்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில், ஆழ்வார் திருநகரியிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்லும் தனியார் பேருந்தை தெந்திருப்பேறை, ஆறுமுக நேரி மார்க்கமாக கடையனோடைப் பகுதி வரைக்கும் நீட்டிப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தாலுகாவில் ஆறுமுகனேரி டவுனில் ஏராளமான ஜனத்தொகை இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இந்தக் கடயனோடை இருக்கிறது. ஆகவே, அரசு ஆறுமுகநேரிக்கும், கடயனோடைக்கும் பஸ் போக்குவரத்தை விஸ்தரிக்க ஆர். டி. ஓ. வைக் கேட்டதற்கு அவருடைய பதில் என்ன

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கனவே சொல்லியதுபோல

Even the one bus which is now serving adayanodai is found to be lacking in traffic potentialities.

எனவே, போதுமான பயணிகள் இல்லாததால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

அரசுப் பேருந்து பயணச் சீட்டுகள்

*635 வினா—திரு. என். கிட்டப்பா, திரு. கே. போஜன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு அரசு பஸ் போக்குவரத்துக்குத் தேவைப்படும் டிக்கெட்டுகளை நமது மாநில அரசின் அச்சகத்தில் அச்சிடாமல் வெளி மாநில அரசின் அச்சகத்தில் அச்சடிப்பது உண்மையா?

(இ) ஆமெனில் அதற்குரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படுகின்ற பயணச் சீட்டுகளில் ஒரு பகுதி, டில்லிப் போக்குவரத்து நிறுவனத்தால் அச்சிடப்பட்டுப் பெறப்படுகின்றது.

(இ) அரசு அச்சகத்தில் வேலைச்சுமை அதிகரித்துள்ளதன் காரணமாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்குத் தேவைப்படுகின்ற பயணச் சீட்டுக்களை அரசு அச்சகம் உரிய காலத்தில் அச்சிட இயலவில்லை.